செய்தி வெளியீடு எண். 31-2018 நாள்: 13.07.2018

# விழுப்புரம் மாவட்டத்தில் தடகள விளையாட்டில் 100மீ ஓட்டம், உயரந்தாண்டுதல் மற்றும் நீளந்தாண்டுதல் ஆகிய பிரிவுகளில் போட்டிகள் நடத்தப்பட உள்ளது என மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர்.இல.சுப்பிரமணியன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

******

1967-ஆம் ஆண்டு சென்னை மாநிலம் 'தமிழ்நாடு' என்று பெயர் மாற்றம் பெற்றதைத் தொடர்ந்து இவ்வாண்டு 50-ஆம் ஆண்டில் அடியெடுத்து வைப்பதை முன்னிட்டு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 11.01.2018 அன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி எண்.110 அறிவிப்பின் கீழ் தமிழ்நாட்டின் பெருமையையும் தமிழர் பெருமையையும் அனைவரும் உணரும் வகையில் தமிழ் வளர்ச்சித்துறையின் சார்பில் விழுப்புரம் மாவட்டத்தில் பள்ளி/ கல்லூரி மாணவர்களுக்கு 19.07.2018-ஆம் நாளன்று விழுப்புரம் விளையாட்டு அரங்கில் தடகள விளையாட்டில் 100மீ ஓட்டம், உயரந்தாண்டுதல் மற்றும் நீளந்தாண்டுதல் ஆகிய பிரிவுகளில் போட்டிகள் நடத்தப்பட உள்ளது. இந்த தடகள போட்டியில் கலந்து கொள்பவர்கள் 31.12.2017 அன்று 21 வயதிற்குட்பட்டவர்களாக இருத்தல் வேண்டும். குறிப்பாக 1.1.1997 அன்றோ, அதற்கு பிறகோ பிறந்தவர்களாக இருத்தல் வேண்டும். மாவட்ட அளவிலான தடகள போட்டியில் பங்கு கொண்டு முதலிடத்தில் வெற்றி பெறுபவருக்கு முதல் பரிசுத் தொகையாக ரூ.2500/-மும், இரண்டாம் பரிசுத் தொகையாக ரூ.1500/-மும், மூன்றாம் பரிசுத் தொகையாக ரூ.1000/-மும் வழங்கப்பட உள்ளது. மாவட்ட அளவில் முதல் இடம் பெற்ற வீரர்/ வீராங்கனை மாநில அளவிலான போட்டியில் கலந்து கொள்ள அனுமதிக்கப்படுவர். இந்த போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு வங்கி கணக்கில் பரிசுத் தொகை நேரடியாக செலுத்தப்பட உள்ளதால் போட்டிகளில் கலந்து கொள்ளும் விளையாட்டு வீரர்/ வீராங்கனைகள் தங்கள் வங்கி கணக்கு புத்தகத்தின் முதல் பக்க நகல் மற்றும் தங்கள் பயிலும் பள்ளி/ கல்லூரி முதல்வரின் பரிந்துரைக் கடிதத்துடன் மாவட்ட விளையாட்டு மற்றும் இளைஞர் நலன் அலுவலரின் போட்டி நாளன்று நேரில் அளித்து ஏராளமானோர் போட்டிகளில் கலந்து கொண்டு பயனடையுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர்.இல.சுப்பிரமணியன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

---

செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், விழுப்புரம்.